Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஆடி வைகாசி மீ 18 உ சனிக்கிழமை (01-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 179

# தொண்டர் ஸ்தாபனங்கள் தமிழர்களுக்கு உதவ தயக்கம்

## ஆணைக்குழு நியமனத்தின் எதிரொலி

யாழ்ப்பாணம், ஜூன் 1

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள், வடக்கு-கிழக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு பெரும் தயக்கம் காட்டி வருகின்றன.

தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து விசாரிப்பதற்கு, ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது தமிழர்களுக்கு உதவுவதைத் தடுப்பதற்கான ஒரு மறைமுக ஏற்பாடு என்று அவை கருதுகின்றன.

எனினும் இது விடயம் குறித்து தமிழ் தலைமை அலுவலகம், தமக்கு நிதி உதவும் நாடுகள் என்பவற்றுடன் கலந்தாலோசிக்கவும்— வடக்கு-கிழக்குக்கு உதவும் பொருட்டு மாற்று வசதிகளை ஆராய்வதற்கும் — அவை திட்டமிட்டு வருகின்றன.

தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியத்தின் முக்கிய கூட்டம் ஒன்று கடந்த வாரத்தில் கொழும்பில் நடைபெற்றது.

அப்போது வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் தமது மனிதாபிமான சேவைகளை, உதவிகளைத் தாம் ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டின் கீழ்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அ, உ, அட்டை உடையோருக்கு

## ஒரு தடவை மட்டுமே உலர் உணவு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

"அ" அட்டை வைத்திருக்கும் தொழில் இழந்தோருக்கும், "உ" அட்டை வைத்திருக்கும் 1500 ரூபாவுக்கு அதிக வருமானம் உடையோருக்கும், ஜூன் மாதத்தில் ஒரு தடவை மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

மே மாதத்தில் இந்த இரண்டு ரகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இரு தடவைகள் நிவாரணம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இம்முறை ஒரு வாரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இடம் பெயர்ந்தவர்களுக்கு இந்த மாதத்திலும் மூன்று தடவைகள் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

உலர் உணவு விநியோகம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அடையாள அட்டை தொலைந்தால்

## முறைப்பாடு செய்வதற்கு தற்காலிக புதிய வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கள் அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள், அது குறித்துத் தங்கள் பகுதி கிராமசேவையாளரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்யலாம்.

வழமையாகப் பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கும் பதிலாக அவை அரசினால் அங்கீகரிக்கப்படும்.

இத்தகவலை ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் திரு. பத்தகுலதுங்க யாழ். அரச அதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பு மக்களின் உடைமைகள் அழித்து நாசம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைய நாட்களாக பொதுமக்கள் தாக்கப்படுவதும் உடைமைகள் அழித்து நாசமாக்கப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பின் வீதிகளில் காணப்பட்ட சுவரொட்டிகளை அகற்றி எடுத்து, அவற்றை எரித்து அந்தச் சாம்பலை நெற்றியில் பூசுமாறு படையினர் பலாத்காரப் படுத்தியுள்ளனர்.

அச்சமயத்தில் பலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டும் உள்ளனர்.

மட்டக்களப்பில் பல பகுதிகளிலும் தமிழர்களின் பெருவாரியான கால்நடைகள் இறைச்சிக்காக பலாத்காரமாக எடுத்துச் செல்லும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ஆனையிறவுப் பகுதியில் நேற்று கடும் விமானத் தாக்குதல்கள்

## ஹெலிகள் தரையிறங்குவதற்கு முடியவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஆனையிறவு முகாமை அண்டிய பகுதிகளில் நேற்று நண்பகல் முதல் கடும் விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

மூன்று பொம்மர்கள், இரண்டு அவ்ரோ விமானங்கள், 4 ஹெலிகள் மாறி மாறி தாக்குதல்களை நடத்தின.

ஹெலிகள் தரையிறங்க முயன்றபோது, விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி, அவை இறங்க முடியாமல் தடுத்தனர்.

கடும் குண்டு வீச்சுக்களை நடத்திக் கொண்டு ஹெலிகளைத் தரையிறக்க முயற்சி எடுக்கப்பட்டது. அப்போதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி அதனை முறியடித்தனர்.

அதை அடுத்து படையினர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மதிய உணவு முத்திரை:

## கட்டுப்பாட்டு விலைக்கு மாணவருக்கு பொருள்கள்!

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகளுக்கு அரசின் கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்பட இருக்கின்றன.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய முத்திரைகளுக்கு ப.நோ.கூ. சங்கங்களில், இங்கு அமுலிலுள்ள கட்டுப்பாட்டு விலைகளுக்கே பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால் மார்ச் மாதம் தொடக்கம் உணவுத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு பொருள்கள் வழங்கப்பட இருப்பதாக செயலக புனர்வாழ்வுப் பிரிவு பணிப்பாளர் திரு எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.

இதே வேளை மார்ச் ஏப்ரல் மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரைகள் 'குமண' கப்பலில் வந்து சேர்ந்துள்ளன. [ஓ-3]

## இந்திய புலனாய்வுக் குழு சிறில் ரணதுங்கவுடன் பேச்சு

கொழும்பு, ஜூன் 1

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் இந்தியப் புலனாய்வுத் துறையின் தலைவர் திரு. விஜய்கரன் நேற்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

திரு. விஜய்கரனும் அவரது சகாக்களும பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவையும் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

## முச்சந்தி முரளி



அங்கை விசாரணை நடத்தி முடிக்கயில்லை அதற்கிடை... விசாரிக்கப் போயி...

## ஓட்டோ சங்கர் உட்பட மூவருக்கு மரண தண்டனை!

## திருவான்மியூர் கொலைத் தீர்ப்பு

சென்னை, ஜூன் 1

தமிழ்நாட்டு அரசியல் மற்றும் திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்திய திருவான்மியூர் கொலை வழக்கில் ஓட்டோ சங்கர் உட்பட மூன்று எதிரிகளுக்கு நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவ் வழக்கை விசாரித்து வந்த செங்கல்பட்டு மாவட்டத் தலைமை நீதிபதி இத்தீர்ப்பை அளித்தார்.

ஆறுபேரைக் கொலை செய்ததாக ஓட்டோ சங்கர் உட்பட 8 பேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எஞ்சிய ஐந்து எதிரிகளுக்கும் நீதிபதி ஆயுள்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். [உ-எ]

## அரசியல் கொலைக்கு முதலாவது "மனித குண்டு"

## 'இந்து' நாளிதழ் தகவல்

சென்னை, ஜூன் 1

உலகிலேயே மிகமுக்கிய அரசியல் தலைவர் (ராஜீவ் காந்தி) ஒருவரைக் கொல்ல 'மனித குண்டு' (Human Bomb) பயன்படுத்தப்பட்டது இதுவே முதற் தடவை.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானிய படையினர் தான் தற்கொலைப் பிரிவுகளை அமைத்துச் செயற்பட்டனர்.

ஓர் அரசியல் தலைவரைக் கொல்ல தற்கொலைப் படையினர் பயன்படுத்தப்பட்ட

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் புதிய, பழைய சினிமாப்பட வீடியோ பிரதிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. பரமசிவம்பிள்ளை, மூத்ததம்பிவளவு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. [4120]

நல்ல நிலையில் உள்ள பீரோ, குசன் செற்றி, அலுமாரி மற்றும் சில பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 16/12, விதானையார் வீதி, யாழ்ப்பாணம். [17005]

### அறிவகம்

பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் ஏனைய உபகரணங்கள், பேப்பர் வகைகள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கருகில்] [சி-0034]

### வகுப்புகள்

Computer Basic, லண்டன் Pitmans Short-Hand, Typing வகுப்புகள் 3-6-91 இல் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. [சி-0032]

### யந்திரம்

கோவில்களுக்கு வேண்டிய எல்லா யந்திரங்களும், வியாபார விருத்தி, கல்வி விருத்திக்கும், விவாகத்தடை நிவர்த்திக்கும், கண்ணூறு, நாலூறு திரவும் யந்திரங்கள் எம்மிடம் பெறலாம். நிவாரணம் பெறாவிட்டால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிடநிலையம், 146, பருத்தித்துறை வீதி, அரசடிச் சந்தி, நல்லூர். [16937]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் தனிப்பட்டவர்களுக்கான ஆரம்ப அறிவிலிருந்து நடத்தப்படும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் தினமும் காலை 10-00 மணி. மாலை 2-00 மணி வரை நடைபெறும். உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: S ஜெயராஜா 204 மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [16572]

### தேவை

புளியங்கொட்டை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-0067]

### தவறிவிட்டது

நக்கீரன் குணைநாதன் ஆகிய எனது அடையாள அட்டை [471532274V] 29-5-91 அன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [17007]

## அன்பான வேண்டுகோள்

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் நீதிக்காகவும், அமைதி வாழ்விற்காகவும் ஏங்கி நிற்கின்றனர். இவ்வேளையில் கத்தோலிக்க திருச்சபை சிறப்பாகச் செயற்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். நாமும் இக் கருத்துடன் ஒன்றிக்கிறோம்.

தங்களது சொந்தக் கருத்துக்களை எழுதி பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகவரி:

இணைப்பாளர்,
கிறிஸ்தவ பொதுநிலையினர் முன்னணி,
8/1, செல்டன் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். [17013]

உ
சிவமயம்

## யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

மேற்படி பாடசாலையிலிருந்து 1991ஆம் ஆண்டு ஐந்தாம் வருடப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுள்ள மாணவர்களைப் பெற்றோர்/பாதுகாவலர் 03-06-91 திங்கள் 9-00 மணிக்கு பாடசாலைக்கு அழைத்து வாருங்கள். இப்பாடசாலையில், இவ் வகுப்பில் தற்காலிகமாகக் கற்போரும் இப் பாடசாலையிலிருந்து தோற்ற விரும்பின் அதிபருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

[17015] – பகுதித் தலைவர் 1-5

இலங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி


## இறுதி வருடப் பரீட்சை

எதிர்வரும் ஆடி மாதம் 20 ஆம் திகதி இறுதி வருட பரீட்சை நடைபெற இருப்பதால் பரீட்சார்த்திகள் [85 ஆம் ஆண்டு, 86 ஆம் ஆண்டு மாணவர்கள் மற்றும் நூனசித்தி அடைந்த மாணவர்கள்] அனைவரையும் 05-06-91 அன்று காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சந்திக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
மாணவர் மன்றம்
L. A. M. C.

[16968]

## 2ஆம் ஆண்டு நினைவு நாள்



| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
| --- | --- |
| 1 | 1 |
| — | — |
| 3 | 6 |
| — | — |
| 1971 | 1989 |

### நாகரெத்தினம் ஆனந்தராஜா
[யாழ்/வைத்தீஸ்வரா மாணவன்]

ஆண்டு இரண்டு சென்றது தான், உம் நினைவு அதிகம் ஆனந்தி, அலைகடல் போல் ஓடுகின்றது கண்ணீர் ஆனந்தி. பார்வையும் உன் பொன்முகம் எங்கே ஆனந்தி, காலம் பதில் சொல்லும் எனக்காத்திருந்தோம் ஆனந்தி, கண்ணீர் தான் நாம் கண்டோம் ஆனந்தி. கொடுங்கூற்றவர்கள் உன்னை அழித்தனரோ ஆனந்தி, உன் மரணம் ஆயிரம் ஜெனனம் ஆனந்தி, எத்தனை ஆண்டு சென்றாலும், நித்தம் உம்மை எம் இதயத்தில் பூசித்து வணங்குவோம்.

அன்பான அம்மா, அப்பா,
அண்ணாமார், அக்கா,
தம்பிமார், தங்கை,

44, பாக்பண்ணை றோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (16962)

யாழ். பல்கலைக்கழகம் - இலங்கை

## மகாபொல கொடுப்பனவு

### 7ஆவது தவணைப்பணம் (வைகாசி-91)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

| முதலாம் வருடம் | | |
| --- | --- | --- |
| மருத்துவ பீடம் | | |
| கலைப்பிரிவு | 31-05-91 | 9-00 — 12-00 முற்பகல் |
| வர்த்தகப்பிரிவு | 04-06-91 | 9-00 — 12-00 முற்பகல் |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 06-06-91 | 9-00 — 12-00 முற்பகல் |

- பதிவாளர்.

## மகாபொல கொடுப்பனவு

### 7ஆம், 8ஆம் தவணைப்பணம் (வைகாசி, ஆனி-91)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

| இரண்டாம் வருடம் | | |
| --- | --- | --- |
| மருத்துவ பீடம் | 31-05-91 | 1-30 — 3-00 பிற்பகல் |
| கலைப்பிரிவு | 04-06-91 | 1-30 — 3-00 பிற்பகல் |
| வர்த்தகப்பிரிவு | 06-06-91 | 1-30 — 3-00 பிற்பகல் |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| **மூன்றாம் வருடம்** | | |
| மருத்துவ பீடம் | 03-06-91 | 9-00 — 12-00 முற்பகல் |
| கலைப்பிரிவு | 05-06-91 | 9-00 — 12-00 முற்பகல் |
| வர்த்தகப்பிரிவு | 07-06-91 | 9-00 — 12-00 முற்பகல் |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| **நான்காம் வருடம்** | | |
| மருத்துவபீடம் | | |
| கலைப்பிரிவு | 03-06-91 | 1-30 — 3-00 பிற்பகல் |
| வர்த்தகப்பிரிவு | 05-06-91 | 1-30 — 3-00 பிற்பகல் |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 07-06-91 | 1-30 — 3-00 பிற்பகல் |
| மருத்துவ பீடம் - 5ஆம் வருடம் | | |

- பதிவாளர்.

[சி-0069]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### வைத்திலிங்கம் செல்வரட்ணம்
[இளைப்பாறிய ஓவசியர்]

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைபதம் அடைந்த எம் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எம் துயரில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்த அனைவர்க்கும் நன்றி கூறுவதுடன் நாளை ஞாயிறு [02-06-91] அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கும்படியும் அனைவரை அன்புடன் அழைக்கிறோம்.

இராசபுரம், மகிவம், உடுவில்.

சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,

[C/0071]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு கண்டுபிடிப்பு

வீட்டு அறையில் நிலத்திலுள் புதைக்கப்பட்டிருந்த கசிப்புப் பரல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி இணுவில் துரை வீதியில் இச்சம்பவம் நடந்தது.

விடுதலைப் புலிகள் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், இணுவில் துரை வீதியில் உள்ள செல்வம் சகி என்பவரின் வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததை அடுத்து சம்பவதினம் இரவு 8-30 மணி அளவில் தாவடி கிராமிய பொறுப்பாளர் தலைமையில் தேடுதல் நடத்தப்பட்டது என்றும் —

அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இரு இளைஞர்கள் தப்பி ஓடி விட்டனர் என்றும் —

கசிப்புக் காய்ச்சுவதற்குரிய உபகரணங்களும், வீட்டு அறை நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த இரண்டு கசிப்பு பரல்களும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)


## இளீன் கட் அறிவித்தல்

உரிமையாளரின் சுகயீனம் காரணமாக மறு அறிவித்தல் வரை ஸ்தாபனம் மூடப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

- இளீன் கட் உரிமையாளர்.

[சி/0062]



## A/L விலங்கியல்

திரு K. சிவபாதம்.

(விலங்கியற் பாட வினா விடை ஆசிரியரும், புத்தக எழுத்தாளரும், ஓய்வு பெற்ற கொத்தணி அதிபரும்).

★ யாழ் நகரில் மீண்டும் மகத்தான ஆசிரியரின் கற்பித்தல்

சனி - ஞாயிறு

A/L 92 - 8.00 தொகுதிகள் - வகுப்பு

A/L 91 - 9. மீட்டல் - வினா - விடை

(18 பாட நேரங்களில் (01 - 06 - 91 தொடக்கம் 28 - 07 - 91 வரை) முழுப்பாடத்திட்டமும் கற்பித்து முடிக்கப்படும்)

ஆரம்பம்: 01 — 06 — 1991

BOND கல்வி நிறுவனம்,

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4117]



## I. D. P.
## COMPUTER CENTRE

I. D. P.

கம்பியூட்டர் பயிற்சி நிலையம்

பிரதான வீதி, மானிப்பாய்.

(மருத்துவ மனைக்கு அருகாமையில்)

அடுத்த புதிய வகுப்புகள் பின்வரும் நெறிகளில்

இன்று சனிக்கிழமை - 01 - 06 1991

மாலை 3 30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

1. BASIC 2. d BASE III +

பயில விரும்பும் மாணவர்கள்

இன்று 01 06 1991 இல்

பதிவு செய்து கொள்ளலாம்.

K. Thalayasingam,
Managing Director.

[இ0066]


## 31 ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கல்வி முன்னேற்றத்திற்காகவும், விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்த எமது கல்லூரியின் முன்னாள் அதிபர், அமரர் ம ஏகாம்பரம் அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்.
பழைய மாணவர் சங்கம்.
கல்லூரி அபிவிருத்திச் சபை.

யா-ஸ்கந்தவரோதய கல்லூரி,
சுன்னாகம்.

[இ/00..]

பருத்தித்துறை துறைமுகம்:

# இறங்குதுறை புனரமைப்புக்கு அமைச்சின் அனுமதி தேவையாம்

யாழ்ப்பாணம் ஜூன் 1

பருத்தித்துறை இறங்குதுறை அபிவிருத்தி வேலைகளைப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

தற்சமயம் 60 அடி நீளமுள்ள இந்த இறங்குதுறையை மேலும் 60 அடி தூரத்துக்கு நீட்டிப் புனரமைக்க நிதி உதவு மாறு யாழ் செயலகம் புனர்வாழ்வு அமைச்சைக் கோரியிருந்தது.

இப்படியாக புனரமைப்பதன் மூலம் நாளாந்தம் 600 தொன் உணவுப் பொருள்களை இறக்கக்கூடிய நிலை உருவாகும் என்றும் செயலகம் சுட்டிக்காட்டியிருந்தது.

ஆனால் இறங்குதுறையைப் புனரமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கிய பின்னரே நிதி ஒதுக்க முடியும் என்று புனர்வாழ்வு அமைச்சு இப்போது செயலகத்துக்குத் தெரிவித்துள்ளது. (அ-3)

## இதுவரை 29 முறைப்பாடுகளே

காணாமற்போனவர்கள் தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழுவுக்கு இதுவரை 29 முறைப்பாடுகளே கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் பகிரங்க விசாரணை அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ளது.

முறைப்பாட்டுக்காரர்களின் வாய்மூல சாட்சியங்கள் இனி பதிவு செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## மினி வான் சேவைகள்

தென்மராட்சி ஜூன் 1

சாவகச்சேரியிலிருந்து ஏனைய பகுதிகளுக்கான மினி வான் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை, கொடிகாமம், மருதனார் மடம் போன்ற இடங்களுக்கு வான்கள் பஸ்நிலையத்திலிருந்து தினமும் பயணிகளை ஏற்றிச் செல்வதை காணக் கூடியதாக இருக்கிறது. (இ-117)


## A/L 91
### மீட்டல் - வினா - விடை

சனி - ஞாயிறு

| | | |
|---|---|---|
| 7. 00 | - Botany | - திரு. ஸ்ரீகரன் |
| 9. 00 | - Zoology | - திரு. K. சிவபாதம் |
| 11. 00 | - Chemistry | - திரு. சிவசோதி |
| 12. 30 | - Physics | - திரு கணேசன் |
| 4. 00 | - Physics | - திரு. அருள்தாஸ் |

ஆரம்பம்: 01 - 06 - 91

BOND கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/4118]


யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல் - 1991

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இறைச்சிக்கடைகள், கோழிக்கடை, முத்திரைச் சந்தைக் கடை ஆகியவற்றை இவ்வட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01 - 07 - 1991 தொடக்கம் 31 - 12 - 1991 வரையான 6 மாத காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கென சரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 14 - 06 - 1991 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையையும் கேள்விப் படிவக் கட்டணம் ரூ 50/-யும் செலுத்துவதன் பேரில் 13 06-1991 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாண மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாண மாநகர ஆணையாளருக்கு 14 - 06 - 1991 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விவரங்களை யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் நாளாந்த இறைவரி கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்.
யாழ்ப்பாணம். 29 - 05 - 1991

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


### அட்டவணை

| குத்தகை விவரம் | குத்தகைக் காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப் பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| கடை இல. 1 | 06 மாதம் | 2500/- | 1085.00 | 123.75 |
| கடை இல 2 | 06 மாதம் | 2500/- | 3090.00 | 112.50 |
| கடை இல. 3, 4, 8, 11 | 06 மாதம் | 2500/- | 920.00 | 112.50 |
| கடை இல, 5 | 06 மாதம் | 2500/- | 5145.00 | 112.50 |
| 2. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| கடை இல. 6 | 06 மாதம் | 2500/- | 2030.00 | 200 00 |
| கடை இல, 8, 9 | 06 மாதம் | 2500/- | 975 00 | 200,00 |
| 3. நாவாந்துறை கோழிக் கடை | | | | |
| கடை இல, 10 | 06 மாதம் | 2500/- | 975 00 | 200.00 |
| 4. முத்திரைச் சந்தைக் கடை | | | | |
| கடை இல, - பி | 05 வருடம் | 2500/- | 10000.00 | 105.00 |

(இ0063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 5 — 1 — 1956

விண்ணில்: 12 — 6 — 1990

திதி. 1-6-1991

### அமரர் மாணிக்கம் குணசேகரம்

[மாநகரசபை, யாழ்ப்பாணம்.]

சென்றது ஆண்டொன்று
சேரனே உனைக்கண்டே
வென்றது ஆண்டவன்(ஆ)
செயலோ வினைப்பயனோ
என் சொல்வோம்! ஆண்டு பல
சென்றே நினைத்திடினும்,
குன்றனைய உந்தன் குணத்தினையே
நன்றே மனத்துறைவோம்

திருமதி. இ. மாணிக்கம்
குடும்பத்தினர்

குமரகோட்டம்,
கொண்டாவில்.

[17004]

## பயறு கொள்வனவு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக் காலத்தில் விளைவிக்கப்பட்ட பயறை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் விலை கொடுத்து வாங்க முன்வந்துள்ளது.

மானிப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் இருந்து ஏற்கனவே நூற்றுக்கணக்கான கிலோ பயறு கிலோ முப்பது ரூபாவீதம் வாங்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் பயறு தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும். [இ-90]

## விலங்கியல்

R. ஈஸ்வரதாசன்
B. Sc (Cey)

ஆரம்பமாகும்
புதிய பகுதிகள்

★ குடித்தொகை பிறப்புரிமையியல்
★ கூர்ப்பு
★ விலங்குப் பாகுபாடு
★ மீட்டல்-வினா-விடை

புதிய பிரிவு

01 - 06 - 1991
4 - 00 p m

தூய-பிரயோக கணிதம்
வினா - விடை

திரு. கலைநேசன்
B Sc. (Cey)

ஆரம்பம்:
01 - 06 - 1991
சனி 9- 30 a m.

விவரங்களுக்கு:
Personal
New Science Centre
Jaffna

[இ-0033]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### விஜயநாயகம் விஜயகுமார்

[பருத்தித்துறைக் கிளை - தொழில்நுட்ப உத்தியோகத்தர்]

உற்பவம்: 2-11-1946

நற்பதம்: 1-6-1989


அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து, எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மை வழி நடத்தி மீளாத் துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தி அடைய இரக்கை அம்பனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

''விஜயகிரி''
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

[4119]

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



ஜனனம்: 05 - 01 - 1933

அகால மரணம்: 04 - 05 - 1991

### அமரர் வ. மகேசு

[பணிப்பாளர் சபை உறுப்பினர், பல. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை]

காலஞ்சென்ற எமது குல விளக்கின் அந்தியேட்டிக் கிரியை எதிர்வரும் 02 06-91 ஞாயிறு காலை 6.30 மணியளவில் பொலிகண்டியிலுள்ள அமரரது இல்லத்தில் நடைபெறும். இதில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் வழங்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

மனைவி, மக்கள்.

தகவல்:
ம. செல்வக்குமார்,
பொலிகண்டி.

[4100]

## 2ஆம் ஆண்டு நினைவு நாள்



### செல்வன் ஸ்ரீரஞ்சன் பிறேமகீதன்

மண்ணில் ஒரு சிறுவனாக: 16 - 02 - 1985

விண்ணில் ஓர் அமரனாக: 01 - 06 - 1989

அன்பான என் அண்ணா என் அண்ணா
ஆசையாயிருக்கண்ணா உங்களைப் பார்த்திட
முடிந்திட்டால் வாருங்கள் எனைப் பார்க்க என்
அண்ணா

அன்புத் தங்கை திவ்வியா

எம் நெஞ்சின் சகாத நினைவெல்லாம்
இதோ! இச் செகத்தினில் உன் நினைவே
போகாது எம்மை விட்டு எம் உயிர் போகும் வரை


என்றும் மறவா!

அப்பா, அம்மா, தங்கை - திவ்வியா,
அம்மப்பா, அம்மம்மா
பாலாமாமா, சீலன் மாமா

75, புதிய இல 109]
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

[16924]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### த. பரமநாதன்

[கணித ஆசிரியர், பண்டத்தரிப்பு]

தோற்றம்: 28 — 11 — 1954

மறைவு: 27 — 05 — 1986

எமது குடும்பத்தின் ஒளி விளக்கே!

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத் தாய்,
சகோதர, சகோதரி,
அண்ணிமார்.

[17009]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 24 — 04 — 1937

மறைவு: 03 — 05 — 1991

திதி: 01 - 06 - 1991

### அமரர் ஆறுமுகம் கனகசிங்கம்

[கிராம சேவை அலுவலர்]

''ஐயா என்ற கேற்றடி குரல்களுக்கு
புன்னகையுடன் சென்றிடும் எங்கள் அப்பாவே''

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து திடீரென எங்களை ஆழ்ந்த துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனிடம் சேர்ந்த எங்கள் அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேத்தி

செட்டிகுளத்தனவு,
இடைக்காடு.

[4089]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## பத்தாவது நினைவு நாள்

இன்று ஜூன் மாதம் முதலாம் திகதி; யாழ்ப்பாணத்தின் வரலாற்றில், ஈழத் தமிழர்களின் சரித்திரத்தில் மறக்கமுடியாத தினங்களில் ஒன்று. சிங்களப் பேரினவாதத்தின் காட்டுமிராண்டித்தனம் தமிழர்களைக் கொடுமைப்படுத்திய துக்கம் நிறைந்த முக்கிய நாட்களில் ஒன்று.

ஈழத் தமிழர்கள் எல்லோருக்கும் அறிவுப் பேராலயமாக விளங்கிய நூல்நிலையம் சிங்களப் பேரினவாதத்தால் 97,000 பெறற்கரிய நூல்களுடன் தகனம் செய்யப்பட்ட பத்தாண்டு நினைவு தினம் இன்றாகும்.

நூல் நிலையத்தை எரிப்பதால், தமிழர்களின் கல்வி அறிவு வளர்ச்சியைத் தடுக்கலாம்; அதன் மூலம் அவர்களை என்றென்றும் அரசியல் அடிமைகளாக வைத்திருந்து தாம் ஆதிக்கம் செலுத்தலாம் என சிங்களப் பேரினவாதம் எண்ணியது; எண்ணுகிறது.

தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாக அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊறு விளைவிப்பது கொழும்பு அரசாங்கங்களின் ஆழமான தொடர்ச் சதியாக இருந்து வருகிறது. அதன் ஓர் அங்கமே யாழ். நூல் நிலையம் தீயினால் பொசுக்கப்பட்ட நாச வேலையும் ஆகும்.

விடுதலை வேட்கை கொண்ட மக்களை, அவர்களின் விடுதலை உணர்வை எந்தவித அட்டூழியங்கள், கொடுமைகள் மூலமும், மழுங்கடித்துவிட முடியாது என்பதைக் கடந்த பத்தாண்டுகளில் தமிழ்மண்ணில் நடந்து வரும் நிகழ்வுகள் எடுத்துக் காட்டி வருகின்றன.

யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்தது போன்ற மனித நாகரிகத்துக்குப் புறம்பான செயல்களால் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையும், போராட்ட உணர்வும் மேன்மேலும் வளர்ந்து உச்சத்தை எட்டி வருவதைக் காணமுடிகிறது.

எனினும் தமிழ் மண்ணில் பல பண்பாட்டுப் படுகொலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான அட்டூழியங்களையும், கொடுமைகளையும் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழர்களின் சொந்தப் பாதுகாப்புடன் கூடிய தனியரசு, தமிழரசு தேவை என்பதையே அவர்கள் நித்தமும் உணர்த்திக் கொண்டிருக்கின்றனர்!

எரித்துச் சாம்பலாக்கப்பட்ட யாழ். பொது நூல் நிலையம் போன்று, பல மடங்கு பெரிய புதிய நூல் நிலையம் ஒன்றைக் கட்டி எழுப்பத் தமிழர்கள் திடசங்கற்பம் கொள்ள வேண்டும். இப்போதுள்ள சாம்பல் மேட்டில் பெரும் கோபுரமாக ஒரு புதிய நூல் நிலையம் மீண்டும் கட்டப்பட வேண்டும்.

அதற்கு முதலில் தமிழ் மண்ணில் நிர்மாணிக்கப்படும் எந்தக் கட்டடமும் எரிக்கப்படாமல், தகர்க்கப்படாமல் பாதுகாத்துக் கொள்ள ஓர் அரசு அமைக்கப்படுவது அவசியத்திலும் அவசியம்.

அதுவரை வருடாந்தம் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் ஒரு வாரத்தை நூலக வாரமாகக் கொண்டாட ஏற்பாடு செய்வது நல்லது. புதிய நூலகத்தின் அவசியத்தையும், வாசிப்பின் அவசியத்தையும் அது நினைவுபடுத்தும். பத்தாவது நினைவுநாளில் அதற்குரிய ஏற்பாடுகளை செய்யின் சிறப்பாக அமையும்.

## கணவனுடன் சென்ற பெண்ணின் தாலி அபகரிப்பு

நெடுந்தீவு, ஜூன் 1

கணவருடன் சைக்கிளில் சென்ற மனைவி தனது தாலிக் கொடியைப் பறிகொடுத்தார்.

குறிகாட்டுவானில் இச்சம்பவம் நடந்தது.

நெடுந்தீவைச் சேர்ந்த திருமதி கனகசபை தாலிக் கொடியை இழந்தவர் ஆவார்.

நெடுந்தீவு செல்வதற்காக குறிகாட்டுவானை நோக்கி இவர்கள் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் சன நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்து இனம் தெரியாத நபர் ஒருவரால் தாலிக் கொடி அபகரிக்கப்பட்டது.

சமீபத்தில் தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் நடமாட்டம் அருகிக் காணப்படுவதால் தனியாக வீதிவழியாகச் செல்பவர்கள் திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகின்றனர். (இ 111)

# கச்சதீவை திரும்பப் பெற

# அ. தி. மு. க. போராடுமாம்

சென்னை, ஜூன் 1

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் கச்சதீவை இலங்கையிடம் இருந்து திரும்பப் பெறுவதற்குப் போராடும்.

அ.தி.மு.க. வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு பற்றி அ.தி.மு.க. விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமாக்கப்பட்டது. அது முதல் இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடித்தொழில் நலிந்து விட்டது.

எனவே கச்சதீவை திரும்பவும் நாம் பெறவும்—

கச்சதீவில் நமது மீனவர்கள் நுழைய விடாமல் தடுக்கும் இலங்கை கடற்படையினரின் ஆதிக்கத்தை தடுக்கவும் உரிய நடவடிக்கை எடுப்போம்.

—இப்படி அ.தி.மு.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளது. (இ-எ)

## ராஜீவை இண்டல் செய்யும் வீடியோப் படங்கள்

### கைவிடும் நிலையில் கட்சிகள்

புதுடில்லி, ஜூன் 1

இரண்டாம் மூன்றாம் கட்டத் தேர்தல் பிரசாரத்துக்காக பாரதீய ஜனதாக் கட்சியும் சிவசேனா கட்சியும் புதிய வீடியோ பிரசாரப் படங்களைத் தயாரிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த வீடியோ படங்களில் ராஜீவ் காந்தியின் கடந்தகால அரசின் நடவடிக்கைகள் இண்டல் செய்யப்பட்டிருந்தன.

ராஜீவ் கொலையுண்டதைத் தொடர்ந்து அந்த வீடியோ பிரசாரப் படங்கள் செல்லாதவையாகிவிட்டன.

இதனைத்தொடர்ந்தே புதிய வீடியோ படங்கள் தயாரிக்கப்படவுள்ளன. (இ-எ)

## மேலும் இரு கப்பல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப மேலும் இரண்டு கப்பல்கள் சேவையில் ஈடுபடஇருக்கின்றன.

தற்சமயம் ஜுமனா, லங்கா ரத்தி, வில்வி விக்கி ஆகிய மூன்று கப்பல்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

மிக விரைவில் ஆமேசன், தாய்வான் என்னும் கப்பல்களும் சேவையில் ஈடுபடவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## ரணதுங்க தலைமையில் சீனாவுக்குத் தூதுக் குழு

கொழும்பு, ஜூன் 1

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தலைமையில் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட தூதுக்குழு ஒன்று இம்மாதம் 16 ஆம் திகதி சீனா செல்லவிருக்கிறது.

1959 ஆம் ஆண்டில் இரு நாடுகளும் செய்துகொண்டுள்ள விமான சேவைகள் உடன்படிக்கையை மீளாய்வு செய்யும் பேச்சுக்களை நடத்தவே இலங்கைக் குழு பீகிங் செல்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கும் பீகிங்குக்கும் இடையே வாரந்தோறும் விமான சேவையை நடத்தும்படி இலங்கை அரசு சீனாவை அப்பேச்சுக்களின்போது கேட்டுக்கொள்ளும் என்று தெரிகிறது.

ஜெட் மற்றும் எப்-7 ரக போர் விமானங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு சீனா ஏற்கனவே முன்வந்திருப்பது தெரிந்ததே. (இ-எ)

## அதிபர் சேவை - II பரீட்சை இங்கிருந்து 16 பேர் சித்தி

இலங்கை அதிபர் சேவை தரம் II க்கு அண்மையில் நடைபெற்ற பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 16 பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:—

கே. புவனேந்திரநாதன் (ஸ்கந்தவரோதய கல். சுன்னாகம்), திருமதி. எஸ். சோமலிங்கம் (கொக்குவில் நாமகள் வித்.), திருமதி. எம். சிவபாதசுந்தரம் (வீரசிங்கம் ம. வித். மீசாலை), பி. கந்தையா (திருநாவுக்கரசு ம.வி. கொடிகாமம்), எம். பாலசுப்பிரமணியம் (வீரசிங்கம் ம.வி. மீசாலை), ஏ. எம். அருணாசலம் (மெமோரியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய்), எஸ். குபேரநாதன் (யூனியன் கல். தெல்லிப்பளை), கே. கணேசலிங்கம் (நாகேஸ்வரி ம.வி. சரவணை), எம். கணபதிப்பிள்ளை (சிவப்பிரகாச வி. பருத்தித்துறை), ரி. நவரட்ணம் (ஞானசாரியார் க. கரவெட்டி), சி. தேவேந்திரராஜா (உடுப்பிட்டி மகளிர் கல்.), திருமதி எம். தனபாலசிங்கம் (சந்தர்மடம் சிவப்பிரகாச வி.), ஈ. செல்வராஜா (சங்கானை தெற்கு ம.வி.), எஸ். ஞானலிங்கம் (மந்துவில் அ.த.க. பாடசாலை), திருமதி. என். இவசோதி (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.), கே. சுந்தரலிங்கம் (தேவரையாளி இந்துக் கல். கரவெட்டி) (வ)

## பல்கலைக்கழக கோவிலில் கும்பாபிஷேகம்

யாழ். பல்கலைக்கழக பார்வதி அம்பாள் சமேத பரமேஸ்வரன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட உத்தம பட்ச மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11 மணி அளவில் நடைபெற இருக்கிறது.

சேர். பொன். இராமநாதனால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலயம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

'பிரதிஷ்டா பூஷணம்' சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வர குருக்கள் தலைமையில் பல குருமார்கள் கிரியைகளை நடத்துவார்கள்.

கும்பாபிஷேக தினத்தன்று பல சைவப் பிரமுகர்களின் சொற்பொழிவுகளும், இராமநாதன் நுண்கலைக்கழகத்தினரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன. (இ 3)

## இஸ்ரவேலுக்கு பத்து போர் விமானங்கள்

டெல் அவிவ், ஜூன் 1

இஸ்ரவேலின் ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு மேலும் 20 கோடி டொலர் நிதி உதவியை வழங்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பத்து எப் - 15 ரக போர் விமானங்களை இஸ்ரவேலுக்கு கொடுத்து உதவப் போவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

டெல் அவிவில் இஸ்ரவேலிய அரசு அதிகாரிகளுடன் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக்செனி நடத்திய பேச்சுக்களின் முடிவில் இந்த அறிவிப்பு வெளியானது. (ஓ-எ)

## கொய்ராளா பதவி ஏற்றார்

காத்மண்டு, ஜூன் 1

நேபாளத்தின் புதிய பிரதம மந்திரியாக திரு. கிரிஜா பிரசாத் கொய்ராளா நேற்று முன்தினம் பதவி ஏற்றார்.

அவருக்கும் அவரது தலைமையிலான 15 அமைச்சர்களுக்கும் நேபாள மன்னர் பிரேந்திரா பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

பிரதமர் கொய்ராளா வெளியுறவு, நிதி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் அரண்மனை விவகாரம் ஆகிய துறைகளுக்கான அமைச்சராகவும் இருப்பார். (இ-எ)

## சோவியத்தில் அரசியல் தஞ்சம்

முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் முன்னாள் ஜனாதிபதி எரிக்ஹொனேக்கருக்கு சோவியத் யூனியன் அரசியல் தஞ்சம் அளித்துள்ளது.

திரு. ஹொனேக்கர் இதனை சோவியத் டெலிவிஷனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

## தீட்சித் காலமானார்

புதுடில்லி, ஜூன் 1

இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும் பழம்பெரும் அரசியல்வாதியுமான உமாசங்கர் தீட்சித் நேற்று முன்தினம் புதுடில்லியில் காலமானார். அவருக்கு வயது 90. (இ-எ)

# போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரி

# பிரான்ஸில் தமிழர்கள் ஊர்வலம்

### மே தினத்தன்று பிரமாண்டமாக நடந்தது

பாரிஸ், ஜூன் 1

ஈழத் தமிழரின் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரி, மே தினத்தன்று பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றது.

பலம்மிக்க பிரெஞ்சுத் தொழிற்சங்கமாகிய சி. ஜி. ரி. யுடன் பிரான்ஸில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இணைந்து நடத்திய இப் பேரணியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்பனவற்றின் பதாகைகளை தாங்கி உணர்வு பூர்வமாக ... வருத்துச் சென்றனர்.

தமிழீழ மக்களின் மீது ஸ்ரீலங்கா மேற்கொள்ளும் கொடூர அடக்குமுறையை உலகிற்கு பறைசாற்றுவதாக சுலோகங்களும், கோஷங்களும் அமைந்தன.

பேரணியின் ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா அரசிற்கு சர்வதேசம் முழுவதும் பொருளாதார உதவிகள் தமிழ் தேசிய இனத்தினை அழிப்பதற்கே பயன்படுத்தப்பட்டு வருவதனை வெளிப்படுத்தும் விதத்தில் லாரி ஒன்று நகர்ந்தது.

அதனைத்தொடர்ந்து தவில், நாதஸ்வர இசையுடன் செங்கொடிகள் தாங்கிய இளைஞர்கள் அணிவகுத்துவர ... வப்படம் எடுத்துச் செல்லப்பட்டது.

தலைவரின் உருவப்படத்தின் பின்னால் சிறுவர், சிறுமியர், பெண்கள், ஆண்கள் என பெருந்திரளான மக்கள் 'எங்கள் தலைவர் பிரபாகரன்', 'தமிழீழமே எமக்கு வேண்டும்', 'சர்வதேசமே எங்கள் போராட்டத்தை அங்கீகரி' என்று உணர்ச்சிகரமான கோஷத்துடன் அணிவகுத்துச் சென்றனர்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை வேற்று மொழி பேசுவோரும் விளங்கிக் கொள்ளும் விதத்திலும், உலக மக்களின் ஆதரவு கோரியும் பெருமளவில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு முகாமையாளர் தற்கொலை பற்றி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வங்கிச் சேவை முகாமையாளர் திரு. சிவலிங்கம் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நிலைமையைத் தெளிவுபடுத்தி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சுன்டுக்குளி அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கக் கிராமிய வங்கியில் பணக் கையாடல் ஒன்று இடம் பெற்றதாக கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி இரவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்தது.

மறுநாள் 29 ஆம் திகதி மக்கள் வங்கி அதிகாரிகள், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் முன்னிலையில் குறித்த கிராமிய வங்கியில் பரிசீலனை மேற்கொள்ளப்பட்ட வேளையில் 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா அளவிலான நிதி கையாடப்பட்டமை கண்டறியப்பட்டது.

இவ் விடயங்களைத் தெரிவிக்க சங்கத்தின் நெறியாளர்கள், பொதுமுகாமையாளர், வங்கிச் சேவை முகாமையாளர் ஆகியோர் சங்கத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டனர்.

வங்கிச் சேவை முகாமையாளர் திரு சிவலிங்கம் இத்தினத்தில் ஓய்வில் சென்றிருந்ததால் பொதுமுகாமையாளர் இவரை அழைத்து வர வாகனம் அனுப்பிய போதும் அவர் தான் சைக்கிளில் வருவதாகவும் வாகனத்தைத் திரும்பிச் செல்லுமாறும் கூறியுள்ளார்.

பின்னர் வீட்டில் இவர் நஞ்சருந்தி யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 30-5-91 அதிகாலை 5.30 மணிக்கு இவர் காலமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ் விசாரணை கூட்டுறவுத் திணைக்களத்தினதும், மக்கள் வங்கியினதும் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்படுகிறது. மேல் விசாரணையின் போது இன்னும் பலர் விசாரிக்கப்பட்டு முழு உண்மைகளும் வெளிக் கொணரப்படுமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தெரிவித்துக் கொள்கிறது—என்றுள்ளது. [ஒ]

## முத்தமிழ்விழா கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூன் 1

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள கைத்தொழில், வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கான முத்தமிழ் விழா பற்றிய கருத்தரங்கு இன்று முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி தேவேந்திரா படமாளிகையில் நடைபெறவுள்ளது. [ஒ-117]

---

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம்

## மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டி - 1991

## இன்று இறுதியாட்டம்

யாழ். இந்து மைதானம் காலை 9 00 மணி

**ஜொனியன்ஸ் வி. க. அணி**

எதிர்

**ஷப்றா அணி**

பிரதம விருந்தினர் :

திரு ஸி. தியாகராஜா

[இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்]

அனைவரும் வருக!

- ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம்

[சி/0072]

---

உ

சிவமயம்

## சிவாசார்யாபிஷேக அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் [03-06-91] திங்கட்கிழமை பகல் 12-30 மணியளவில் வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில் காஸ்யப கோத்திரோற்பவ

சிவஸ்ரீ சபாபதிக் குருக்கள் உருத்திரானந்த சர்மா

[சிவானந்த குருகுல மாணவன் நெடுங்கேணி சுவாமியன் அரசடி வைரவர் கோவில் பிரதம குரு]

அவர்களுக்கு

மேற்படி ஆலய மண்டபத்தில் சிவாசார்யாபிஷேக வைபவம் கிரியாக்கிரமஜோதி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களால் நடத்தி வைக்க திருவருள் பாலித்துள்ளது. யாவரும் வந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்,

சோ. பாலகிருஷ்ண சர்மா தம்பதிகள்,

யோ. பிரபாகரேஸ்வர சர்மா தம்பதிகள்.

[17003]

---

# கிளாட்ஸ்ரோன் ஒரு வாரத்தில் திரும்புவார்

கொழும்பு, ஜூன் 1

இலங்கை அரசியால் விரும்பத்தகாத நபராகப் பிரகடனப்படுத்தப்பட்ட கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோன் இன்னும் ஒரு வார காலத்தில் தாயகம் திரும்பி விடுவார் என்று பிரிட்டிஷ் தூதரகப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். [இ-ஈ]

# இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஷப்றா அணி மோதும்.

இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஸி. தியாகராஜா பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார். [உ]

# சென். ஜேம்ஸில் இன்று

குருநகர், ஜூன் 1

குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து நடத்தும் முத்தமிழ் விழா இன்று காலை 10 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பர். [ஒ-51]

# சிவானந்தர் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

உலக திவ்விய ஜீவன சங்க ஸ்தாபகரான சுவாமி சிவானந்த மகரிஷி, சந்நியாசம் பெற்ற புண்ணிய தின நிகழ்ச்சி, யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில், இன்று சனிக்கிழமை காலை 7-00 மணி தொடக்கம் 8-00 மணி வரை அனுஷ்டிக்கப்படும். நிகழ்ச்சிகளில் தியானம் கூட்டுப் பிரார்த்தனை ஆகியவையும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். [ஆ]

# வள ஆய்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் தமிழீழ வள ஆய்வுக் கருத்தரங்குத் தொடரின் இறுதி நாளாகிய இன்று நான்கு கட்டுரைகள் ஆய்வு செய்யப்படவுள்ளன.

நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய "கண்ணாடும் கலையும்", தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் எழுதிய "தமிழீழ இலக்கிய வளம்", கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்ஐயர், கலாநிதி ஜெ. சந்திரகாந்தன் ஆகியோர் எழுதிய "இந்து மத, கிறிஸ்தவமத சமயப் பின்னணி" இவற்றுடன் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை எழுதிய "குடியேற்றம்" ஆகியனவே அந்த நான்கு கட்டுரைகளும் ஆகும்.

கருத்தரங்குகள் காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணி வரை பல்கலைக்கழகத்தில் [illegible]

# கந்தசாமி நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

தியாகி கந்தசாமியின் 44 ஆவது ஞாபகார்த்த விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மூளாய் வீதியில் உள்ள விளாத்தி தோட்டத்தில் நடைபெறும்.

வட்டு இளைஞர் உடலுள விருத்திச் சங்கமும் வட்டு மகளிர் இலக்கிய வட்டமும் இணைந்து இதனை நடத்துகின்றன. [இ]

## மட்டக்களப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றன.

இதேசமயம் ஏறாவூர்ப் பகுதியில் பரம்பரையாக வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் பல பலவந்தமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன. (ஒ 5)

## முறைப்பாடு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுக்கச் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்த மாற்று ஏற்பாடு மே மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் ஆறு மாதங்களுக்குத் தற்காலிகமானது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலீஸ் நிலையங்கள் இல்லாததால், அடையாள அட்டைகளைத் தொலைப்பவர்கள் அதுகுறித்த முறைப்பாடு செய்து புதிய அட்டைகளுக்கு விண்ணப்பிக்க முடியாதுள்ளதாக யாழ் அரச அதிபர் சுட்டிக் காட்டியிருந்தார். அதனைத் தொடர்ந்தே இந்தத் தற்காலிக வசதி செய்யப்பட்டுள்ளது.

அடையாள அட்டையைத் தொலைத்தவர்களின் முறைப்பாடுகளை கிராமசேவையாளர்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் அந்தச் சுற்று நிருபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [அ-100]

## ஒரு தடவை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சம்பந்தமாக, யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முடிவுகள் வருமாறு:-

★ தற்போது நடைமுறையில் உள்ள உலர் உணவு விநியோகத்தை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பாகக் கொடுத்து முடிக்க வேண்டும்.

★ வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்த இடம்பெயர்ந்தோர் வசதியை முன்னிட்டு, தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கக் கிளைகளை சங்கானை உடுவில், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஆரம்பிக்க அனுமதி வழங்குதல். [ஒ-8]

## ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாதன் பக்கமாக முன்னேறி தாக்குதல் நடத்த முயன்றனர்.

குண்டு வீச்சின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் கடுமையாக மோதினர். சுமார் அரை மணித்தியாலத்துக்கு மேலாக நடந்த மோதலின் பின்னர் படையினர் பெரும் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஹெலிகளைத் தரையிறக்குவதற்குத் தொடர்ந்தும் படையினர் பெரும் பிரயத்தனம் செய்த போதும் அவற்றை நேற்றிரவு வரை தரையிறக்க முடியவில்லை என்று கடைசியாக கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை—

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. [ஒ-15-117]

## தொண்டர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்ய வேண்டிய விரும்பத்தகாத சூழ்நிலை உருவாகியிருப்பதாக அதிருப்தி — கவலை — தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது தமிழர்களுக்கு உதவுவதைத் தடுப்பதற்குத் தானோ என்று எண்ண வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

வடக்கு - கிழக்குக்கு உதவுவதற்குத் தாம் தயக்கம் காட்டி வருவதற்கு அரசின் நடவடிக்கைகளே காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்

எனினும் மனிதாபிமான சேவையை நியாயமான முறையில் செய்வதற்குத் தங்கள் தலைமைப் பீடங்களுடன் கலந்தாலோசித்து மாற்றுத் திட்டங்களைத் தயாரிக்க ஆலோசித்து வருவதாக அவர்கள் வடக்கு — கிழக்கிலிருந்து சென்ற தமது உத்தியோகத்தர்களிடம் தெரிவித்ததாக அறியவந்துள்ளது. [அ-3]

## அரசியல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தற்கு ஆதாரம் ஏதும் கிடையாது.

இப்படி "இந்து" நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது

ஐரிஷ் கெரில்லாக்கள் கூட இந்த தற்கொலைத் தாக்குதல் முறையை வெற்றிகரமாகச் செய்வார்களா என்பது சந்தேகமே.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் கூட சுட்டே கொல்லப்பட்டனர்; 'மனிதகுண்டு' முறையில் ஒருவர் தானும் கொல்லப்படவில்லை என்றும் "இந்து" தெரிவிக்கிறது. [இ-எ]

---

## மரண அறிவித்தல்

### பரமு சின்னத்துரை

ஆயிலி, காரைநகரைச் சேர்ந்த பரமு சின்னத்துரை நேற்று [1-06-91] காலமாகிவிட்டார். இவர் சுந்தரியின் அன்புக் கணவரும், சோதியம்மா, பேரின்பமலர் (அரசினர் வைத்தியசாலை, மண்டைதீவு), குகநாதன் [சவூதி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னத்துரை, சண்முகம், சந்திரகாந்தாவின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் நவாலி சின்னப்பா வீதியிலுள்ள மருமகனின் இல்லத்தில் இன்று [01-06-91] 2 மணியளவில் நடைபெறும்.

தகவல்:

ச. பேரின்பமலர் (மகள்)

சின்னப்பா வீதி,
நவாலி.

[16969]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 360/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-06-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org